பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 12 வியாழக்கிழமை 29.09.2022 கதிர் 326

### இனி இது இரகசியம் அல்ல!

இலங்கை தமிழ் அகதிகள் இந்தியாவுக்குத் தப்பிச் செல்லும் விடயம் இந்திய - இலங்கை கடற்படையினர் இடையே புதிய முறுகலையும் இராஜதந்திர நெருக்கடியையும் ஏற்படுத்தியிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

☞2

## இலங்கையைக் கைவிடாது இந்தியா!

# தொடர்ந்து உதவுவோம் என்று ரணிலிடம் மோடி நேரில் உறுதி



**அயல் நாடான இலங்கையை இந்தியா எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாது. இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் அதிகரிக்கப்பட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்து உதவியளிக்கப்படும்.**

**- இவ்வாறு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் உறுதியளித்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.**

**ரணில் விக்கிரமசிங்கவுக்கும், நரேந்திர மோடிக்கும் இடையில் இடம்பெற்ற சிநேகபூர்வ சந்திப்பின்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.**

☞9

## இனப்படுகொலை இடம்பெறவில்லை

### 40 ஆயிரம் பேர் கொல்லப்படவும் இல்லை என்கிறார் பொன்சேகா



இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்படவும் இல்லை.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜெனிவா விவகாரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவக் குறைப்பு செய்யப்பட வேண்டும் என்ற ஜெனிவா யோசனை ஏற்புடைய விடயம் அல்ல. அதனை ஏற்க முடியாது.

☞2



## ஜப்பான் – இலங்கை உறவை மேலும் வலுப்படுத்த இணக்கம்

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிடாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் டோக்கியோவிலுள்ள அகசகா மாளிகையில் நடைபெற்றது.

இலங்கை ஜனாதிபதியை வரவேற்ற ஜப்பானிய பிரதமர், ஜனாதிபதியாகப் பதவியேற்றதற்கு தனது வாழ்த்துக்களை இதன்போது தெரிவித்தார்.

☞2

காதல் விவகாரத்தால் சண்டை

## இராஜாங்க அமைச்சரின் மகன் உட்பட ஐவர் கைது



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் மகன் உள்ளிட்ட 5 பேர் கிரிபத்கொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்

☞2

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு:

## சிங்களவர்கள் ஆறு பேருக்கு பிணை மறுப்பு

சுமார் 250 கிலோ போதைப்பொருள்கள் கடத்துவதில் ஈடுபட்டிருந்தனர் என்று சந்தேகிக்கப்படும் 6 இலங்கை மீனவர்களுக்குப் பிணை வழங்க இந்தியாவின் கேரள மாநில உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

அவர்கள் இலங்கையர்கள்

☞2

## திலீபன் நினைவேந்தலை குழப்பியது முன்னணியே

### பகிரங்கப்படுத்திய ஜனநாயகப் போராளிகள்

போராளிகளைப் பற்றிக் கதைப்பதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு எவ்வித அருகதையும் இல்லை – என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலின் போது ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இந்த ஊடக சந்திப்பில் கருத்துத்

☞2

## தேசிய பேரவையில் இணையமாட்டோம்!

### பிரதான எதிரணிக் கட்சிகள் அறிவிப்பு

தேசிய கொள்கைகளை வகுப்பதற்கான 'தேசிய பேரவை'யில் அங்கம் வகிக்கப்போவதில்லை என்று எதிரணியிலுள்ள பிரதான அரசியல் கட்சிகள் நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன.

தேசிய பேரவையின் முதலாவது கூட்டம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று நடைபெறவுள்ள நிலையிலேயே, மேற்படி

☞9

## கிழக்கில் மக்களின் பேராதரவுடன் தொடரும் கையெழுத்துப் போராட்டம்





பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்று மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் தலைமையில் இந்தக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

மக்களை வதைக்கும் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக்

☞9

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியைச் சேர்ந்த ஏழு பேர் மன்னார் கடல் பகுதி ஊடாக, மீனவர்களின் படகுகளில் பயணித்து இந்திய எல்லைக்குள் உள்ள மணல் திட்டில் இறங்கினர் என்று கூறப்படுகின்றது.

இந்தியக் கடற்படையினர் தங்களது மணல் திட்டுகளில் தரித்து நின்ற இலங்கைத் தமிழர்கள் ஏழு பேரையும் படகுகளில் சென்று மீட்பதற்கு சிறிது நேரம் தாமதம் ஏற்பட்டதைப் பயன்படுத்தி இலங்கை கடற்படையினர் உள்நுழைந்து, இலங்கை அகதிகளை பலவந்தமாக மீட்டு இலங்கைக்கு கொண்டு சென்று விட்டனர் என்று இந்தியக் கடற்படை சீறுகின்றது.

இரண்டு பெண்கள் மற்றும் ஐந்து சிறுவர்கள் உட்பட ஏழு பேரே இவ்வாறு சட்ட விரோதமாக நாட்டிலிருந்து குடிபெயர்வதற்காகக் கடல் மார்க்கமாகச் சென்ற சமயம் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

தங்களின் கடல் பிராந்தியத்துக்குள் ஊடுருவி, இலங்கை அகதிகளை இலங்கைக் கடற்படையினர் மீட்டுச் சென்றிருக்கின்றமை தங்கள் இறைமைக்குச் சவால் விட்ட விடயமாக இந்தியத் தரப்பால் கருதப்படுகின்றது.

இந்த நெருக்கடி அடுத்து வரும் நாள்களில் இராஜதந்திர அழுத்தங்களாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

***

ஏற்கனவே இப்பத்தியில் நான் குறிப்பிட்டபடி நேற்று இரவு மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நவராத்திரி பூஜை இடம்பெற்றது. மஹிந்த ராஜபக்ஷ தம்பதியர், அவர்களுக்குத் தெரிந்த ஊடகவியலாளர்கள், பிரமுகர்கள் என சுமார் நூறு பேர் வரை இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

முக்கியமாக இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பாரதிய ஜனதா கட்சி பிரமுகர் சுப்பிரமணிய சுவாமி பூஜையின் போது மஹிந்தர் தம்பதியினருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்து தெற்பை போட்டு வழிபாடுகளில் கலந்து கொண்டார். முதன்மைக் காளாஞ்சியும் பெற்றார்.

இந்தப் பூஜைக்கு வர முன்னர் அவர் மஹிந்தவின் சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவை அவரது கொழும்பு இல்லத்தில் சந்தித்துப் பேசினார் எனத் தெரிகின்றது.

நேற்றைய நவராத்திரி பூஜைக்குத் தான் தனது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவை அழைத்தபோதும் அவர் வேறு சந்திப்புகள் காரணமாக இந்த நிகழ்வில் பங்கு பெற்றாதமை தமக்கு மனக்கவலை என்று நேற்றிரவு நெருங்கியவர்களுடன் கருத்துப் பரிமாறிக் கொண்டார் மஹிந்தர்.

நேற்று மஹிந்த ராஜபக்ஷ வீட்டில் நவராத்திரி பூஜையை முடித்துக் கொண்டு புறப்பட்ட சுப்ரமணிய சுவாமி விடைபெறும்போது மஹிந்தரின் கையை அழுத்திப் பிடித்து 'எந்த நெருக்கடி வந்தாலும் உங்களோடு நான் நிற்பேன்' - என்று தனது நட்பு நெருக்கத்தை உணர்வுபூர்வமாக கூறிச் சென்றமையையும் அவதானிக்க முடிந்தது.

இன்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெறும் ஒரு செயல் அமர்வில் சுப்ரமணிய சுவாமி முக்கிய உரை ஆற்றுகின்றார் எனத் தெரிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் வடக்கு அரசியல் நிலைவரம் உட்பட சில முக்கிய அரசியல் விவகாரங்கள் குறித்து அவருடன் மூத்த அரசியல் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடி, சில முடிவுகளை எடுத்து, நடைமுறைப்படுத்தச் செய்யத் திட்டமிட்டுள்ளார் என அறிய வந்தது.

அக்டோபர் பிறந்ததும் மாற்றங்கள் பற்றிய பல செய்திகள் வரலாம். பார்ப்போம்.

- மின்னல் -

## தொடர்ந்து உதவுவோம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதி நிகழ்வில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் மாலை இருவருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

சில நிமிடங்கள் இருவரும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளின் தற்போதைய நிலை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக நரேந்திர மோடி, ரணில் விக்கிரமசிங்கவிடம் வினவினார்.

இதையடுத்து இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்ற ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையை சாதகமாக ஏற்றுக்கொண்ட நரேந்திர மோடி, அயல் நாடான இலங்கையை இந்தியா எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாது என்றும், இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் அதிகரிக்கப்பட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்து உதவியளிக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

## இனப்படுகொலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பலத்தை எண்ணிக்கையுடன் மதிப்பிடக்கூடாது. இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதியை வைத்துதான் கணக்கிட வேண்டும். இலங்கை இராணுவம் இன்னமும் தொழில்நுட்ப ரீதியில் மேம்படவில்லை. எனவே, படைக் குறைப்பு யோசனை ஏற்புடையது அல்ல.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்படவும் இல்லை. ஓரிரு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். அது தொடர்பில் உள்ளகவிசாரணை நடத்தலாம். இதனைப் போர் முடிந்த கையோடு செய்யாததாலேயே பிரச்சினை ஏற்பட்டது - என்றார்.

## ஜப்பான் - இலங்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையிலான நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்தல் மற்றும் எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இதேவேளை, ஜப்பானிய பேரரசர் நருஹிதோவுக்கும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் நடைபெற்றது.

டோக்கியோவில் உள்ள பேரரசரின் உத்தியோகபூர்வ இல்லமான இம்பீரியல் அரண்மனையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

## இராஜாங்க .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

காதல் விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 5 பேருக்கும் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கிரிபத்கொட, மாகொல வீதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு அருகில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சிங்களவர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதால், பிணை வழங்கப்படும் பட்சத்தில் அவர்கள் தலைமறைவாவதற்கு சாத்தியங்கள் உள்ளன. எனவே, அவர்களை வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் நிறுத்த முடியாமல் போகலாம் என்பதால் பிணை மறுக்கப்படுகின்றது என கேரள மாநில உயர்நீதிமன்ற நீதிபதி விஜு ஆபிரஹாம் தனது உத்தரவில் கூறினார்.

தொடுவாவவைச் சேர்ந்த சுனில் குரேரா மற்றும் ரணில் ஜெயந்த ஃபெர்னாண்டோ, கண்டியைச் சேர்ந்த சாமிக கமகே தேசப்பிரிய மற்றும் புத்தளத்தைச் சேர்ந்த மது தில்ன் ஜெயதிஸ்ஸ, நிபுண் சதருவான் மற்றும் நிலாந்த அருணகுமார ஆகிய ஆறு பேரே போதைப்பொருட்கள் கடத்தினர் என்று இந்தியக் கடலோரக் காவற்படையால் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி அவர்கள் பயணித்த 'ஆகர் துவா' என்கின்ற மீன்பிடிப் படகுடன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சாமிக கமகே தேசப்பிரியவின் இயற்பெயர் தாரக நிரந்த ரூபசிங்க என்றும், அவருக்குப் போதைப்பொருள்களை கடத்துவதற்காகப் போலி அடையாள அட்டை வழங்கப்பட்டிருந்தது என்று நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த ஆறு பேரும் சர்வதேச போதைப்பொருள்கள் கடத்தல் வலையமைப்பின் ஒரு பகுதியாகச் செயற்பட்டனர் என்று நீதிமன்றத்தில் அரச தரப்பில் கூறப்பட்டது. எனினும், அவர்கள் தரப்பு சட்டத்தரணிகள், அவர்கள் சாதாரண மீனவர்கள் என்றும், அவர்கள் கைது செய்யப்பட்ட போது போதைப்பொருட்கள் ஏதும் கண்டெடுக்கப்படவில்லை என்றும் வாதிட்டனர்.

ஆனால், இந்தியக் கடலோரக் காவற்படையின் சார்பில் அரச வழக்கறிஞர் அவர்கள் பயணித்த படகின் ஜி.பி.எஸ். நிழற்படங்கள், செய்மதி தொலைபேசி உரையாடல்கள், வங்கிப் பணப்பரிமாற்ற ஆதாரங்களை நீதிமன்றில் சமர்ப்பித்து அவர்களுக்கும் போதைப்பொருள்கள் கடத்தலுக்கும் தொடர்புண்டு என்று எதிர்வாதம் செய்தனர்.

நீதிபதி விஜு ஆபிரஹாம் தனது உத்தரவில் சுனில் குரேரா இத்தாலியில் கடந்த 2000ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார் என்றும், அவரது 5 பிள்ளைகள் இன்னும் இத்தாலியில் உள்ளனர் என்றும், அதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, அவர்கள் இலங்கையர்கள் என்பதால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை மூன்று மாதங்களுக்கும் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

இவர்கள் ஆறு பேரும் விசாரணை நீதிமன்றில் இருமுறை பிணை கோரி விண்ணப்பித்த போது அது நிராகரிக்கப்பட்டதால், அதை எதிர்த்து கேரள உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

## தேசிய பேரவையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தியாகி திலீபனின் நினைவேந்தலின் போது தங்களின் பிழைகளை மூடி மறைக்க அவசர அவசரமாக ஊடக சந்திப்பை நடத்தி பச்சைப்பொய்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சுகாஷ் அவிழ்த்து விட்டுள்ளார். பொய்களைக் கூறி முன்னாள் போராளிகள் மீது அவதூறைப் பரப்பியமைக்கு அவருக்கு எமது கண்டனங்களையும் தெரிவிக்கின்றோம்.

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நினைவேந்தலின் போது இருவர் காவடிகள் எடுத்து வந்தபோது பொதுமக்கள், முன்னாள் போராளிகள் எனப் பலர் அவ்விடத்தில் நின்றார்கள். காவடி வரும் போது எந்தக் குழப்பமும் ஏற்படவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தான் குழப்பங்களை ஏற்படுத்தினார்கள்.

காவடியை இறக்குவதற்காகப் பொதுச் சுடரைச் சற்று தள்ளிவைக்குமாறு கூறிய போதே குழப்பங்கள் ஏற்பட்டன. தீபத்தைத் தள்ளி வைக்க முடியாது; காவடியை இங்கே இறக்க முடியாது என அடாவடி செய்த பின்னரே குழப்பம் ஏற்பட்டது. அது அனைத்து ஊடங்களிலும் வெளிவந்தன.

அடுத்து தாம் ஆறு ஆண்டுகளாக நினைவேந்தல் செய்து வருகின்றனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கூறுகின்றார்கள். யுத்தம் நிறைவடைந்த பின்னர் 2016ஆம் ஆண்டு தியாக தீபத்தின் நினைவிடத்தை முதலில் துப்பரவாக்கி முதல் நிகழ்வை நாங்கள் தான் செய்தோம். அதற்கு ஆதாரங்களாக ஊடகங்களில் செய்திகள் உள்ளன.

இவ்வாறாக இருக்க ஆறு ஆண்டுகளாகத் தாம் செய்கின்றோம் என்கின்றார் சுகாஷ். அவருக்குக் கணக்குத் தெரியாது போல். இனி நாம் அவருக்கு ஒன்று, இரண்டு சொல்லி கொடுக்க வேண்டும் போல்.

நாம் முதல் முதல் செய்த ஒரு வருட நிகழ்வை மூடி மறைத்து தங்களின் சுயலாப அரசியலுக்காக எங்களால் நினைவுகூரப்பட்ட நினைவேந்தலை அவர்கள் மறைக்கின்றார்கள்.

அடுத்து 2017ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்காக நாம் அவ்விடத்தைத் துப்பரவு செய்யும்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வந்து எங்களோடு கதைத்தார்கள். நாங்கள் இருதரப்பும் சேர்ந்து ஒன்றாகச் செய்வோம் என்று எங்களுடன் அவர்கள் பேச்சுகளை நடத்தினர்.

மறுநாள் கட்சி அலுவலகத்திற்கு எம்மை அழைத்து, கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் கதைத்து நாங்கள் சம்மதம் தெரிவித்த பின்னரே இரு தரப்பினரும் சேர்ந்துதான் 2017ஆம் ஆண்டு நினைவேந்தலைச் செய்தோம்.

அப்படியாயின் நாங்கள் யார்? இப்போது

(09ஆம் பக்கம் பார்க்க)













# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக பொலன்னறுவையில் கையெழுத்து வேட்டை!

பொலன்னறுவை, செப். 29

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை செவ்வாய்க்கிழமை மாலையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய அன்று மாலை பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை பொலன்னறுவையில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரா.சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாமலின் புதுக்கதை!

ராஜபக்ஷக்களின் பரவணிப் பண்பியல்பிலிருந்து தாம் ஒன்றும் வேறுபட்டவர் அல்லர் என்று நிரூபித்துக் காட்ட முயல்கின்றார் போலும் இளம் அரசியல்வாதியான நாமல்.

அப்படி நடப்பதன் மூலம், புதிய அரசியல் கலாச்சாரப் பாதை ஒன்றை முன்னெடுப்பதற்குத் தமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பை அவர் கோட்டை விடப் போகின்றார் என்று தோன்றுகின்றது.

தமிழர்களின் நீதி நியாயமான அபிலாசைகளை – உரித்துகளை – காலம் காலமாக மறுத்து, புறமொதுக்கி, நிராகரித்து வரும் தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதம் அதை நியாயப்படுத்துவதற்குப் பொய்யையும், புரட்டையும், புனைகதைகளையும் முன்வைப்பது வழமை.

அதிலிருந்து தாமும் வேறுபட்டவர் அல்லர் என்பதைக் காட்ட முனைந்திருக்கிறார் இளம் ராஜபக்ஷவான நாமல். நியாயமான அரசியல்வாதி என்று அவர் தொடர்பில் கட்டி எழுப்பப்படக்கூடிய பிம்பத்தைத் தகர்த்துத் தாமும் தென்னிலங்கையின் மூன்றாம் தர பௌத்த, சிங்களப் பேரினவாத அரசியல் தலைவர்தான் என்று நிரூபிக்குமாற் போல இருக்கின்றது அவரது இந்த நடவடிக்கை.

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியிலும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது."

"ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. அவர்கள் எதிர்க்கட்சிகளுடன் கைகோர்த்து ராஜபக்ஷக்களின் ஆட்சியைக் கவிழ்க்கவே பாடுபட்டார்கள்."

"அன்றும் சரி, இன்றும் சரி வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் நலனில் சிறிதளவிலும் அக்கறையின்றிச் செயற்படுகின்றனர். சுயலாப அரசியலே கூட்டமைப்பினரின் இலக்கு. இதைத் தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்" – என்று கூறியிருக்கின்றார் நாமல்.

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் பேச்சு இது. மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் வேலை.

ராஜபக்ஷக்கள் தமிழர்களுக்கு தீர்வு தருவதற்கு ராஜபக்ஷக்களின் அரசுக்குக் கூட்டமைப்பு முண்டு கொடுக்க வேண்டும் என்று நாமல் எதிர்பார்ப்பாராயின் அது அரசியல் கற்றுக்குட்டித்தன சிந்தனையே ஆகும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் தீர்வுக்காக 2011 ஆம் ஆண்டில் 17 சுற்றுப் பேச்சுக்களை கூட்டமைப்பினர் நடத்தினர். அடுத்த சுற்றுப் பேச்சுக்காக அவர்கள் காத்திருந்து ஏமாந்தனர். மஹிந்தரின் அரசுதான் பேச்சைப் புறக்கணித்து, தீர்வுக்கான வாசலை மூடி அடைத்தது.

கோட்டாபய ராஜபக்ஷ தென்னிலங்கைப் பிரச்சினைகள் தமது கழுத்துக்கு ஆப்பாக வரும் இறுதி நேரத்தில் தான் தமிழரை ஏறெடுத்துப் பார்த்தார். அச்சமயத்தில் கூட கூட்டமைப்பு இணங்கி அவருடன் பேசச் சென்றது.

இவையெல்லாம் மக்களுக்கு தெரிந்த உண்மைகள். இவற்றை மூடி மறைத்து இப்போது புதுக்கதை – புருடா – விடுகிறார் நாமல்.

# கடன்பட்ட தொழில்முனைவோருக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்குங்கள்

## வங்கிகளிடம் அமைச்சர் கோரிக்கை



நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு வங்கிகளின் நிதி நிலைமையைப் பாதுகாத்து கடன் பெற்ற தொழில் முயற்சியாளர்களுக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பணப்புழக்கத்தைப் பாதுகாக்க வங்கிகள் வட்டி விகிதத்தை உயர்த்தியதால் சில தொழில்முனைவோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

வங்கி முறையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் அவசியமானாலும், வர்த்தகர்களைப் பாதுகாப்பதும் மிகவும் முக்கியமானது என்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய உரிய சலுகைகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் வங்கிகளின் தலைவர்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச வங்கிகளின் தலைவர்களுடன் நிதி அமைச்சின் வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பேசிய அவர், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சுக்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

# கெஹெலியவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட இருவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (புதன் கிழமை) இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யப்பட் டதன் பின்னர், அமைச்சர் உள்ளிட்ட ஏனைய பிரதிவாதிகளையும் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

வஅத்துடன், இந்த வழக்கை நவம்பர் 03 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தீ விபத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை பார்க்கவந்த முஜிபுருக்கு மக்கள் எதிர்ப்பு

தீ விபத்து ஏற்பட்ட காஜிமாவத்தை வீட்டுத் தொகுதிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று (புதன்கிழமை) காலை சென்றுள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் வருகையை அடுத்து அங்கிருந்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்தமையால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தால் தமது வீடுகளை இழந்த தமக்கு நீதி வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானிடம் கோரிக்கை விடுத்தனர்.

இருப்பினும் வீட்டுப் பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

# அரச உத்தியோகத்தர்கள் தேசிய தொழில் தகைமை சான்றிதழ்கள் பெறுவது தொடர்பில் விளக்கம் அளிப்பு!

தொழில் பயிற்சி அதிகாரசபை காரைதீவு பயிற்சி நிலையத்தால் முன் கற்றல் அங்கீகாரம் முறையினூடாக தேசிய தொழில் தகைமை தரம் 4 சான்றிதழ் எவ்வாறு பெறுவது என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு காரைதீவுப் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது அதிகாரிகளால் சான்றிதழைப் பெறத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி நெறியைக் கற்று கொண்டிருப்பவர்கள் (6 மாதமாக), தொழில் செய்து கொண்டிருப்பவர்கள், வியாபாரத்தைப் பதிவு செய்து நேரடியாகத் தொழிலில் ஈடுபடுபவர், 11/2 வருட அனுபவம் தொடர்ச்சியாக இருப்பவர்கள், வெளிநாடு சென்று வந்தவர்களுக்கு வாய்ப்பும், திறமையும் அதிகம் போன்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

அதே போன்று ஒன்லைன் மூலம் எப்படி விண்ணப்பிக்க முடியும், 7 நாள்களுக்குள் சான்றிதழ் வழங்கப்படும் விடயம், போலிச் சான்றிதழ் எடுக்க முடியாத தன்மை, தனிநபருக்கு சான்றிதழ் எடுக்க முன்பு 25 ஆயிரம் ரூபா செலவானது. ஆனால் தற்போது ஜனாதிபதி நிதியத்தால் இலவசமாக வழங்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் விளக்கி திறமையுள்ளவர்கள் மாதக்கணக்கில் தொழிலை வருமானத்தை விட்டு 6 மாதங்கள் முழு நேர பயிற்சி பெற வேண்டியதில்லை 3 மணித்தியாலங்கள் மட்டும் பரீட்சைக்குச் செலவிட்டால் போதும் போன்ற விடயங்கள் இந்த நிகழ்வில் எடுத்துக் காட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன் உட்பட அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் இருவர் முல்லேரியாவில் துப்பாக்கிகளுடன் கைது!

முல்லேரிய வல்பொல பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை இரவு வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் பாதாள உலக உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என முல்லேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

ரஞ்சிலு பேடியின் புத்திக பிரசாத் எனப்படும் அமி சுரங்க மற்றும் சாமர சதுரங்க ஆகிய இரு பாதாள உலக உறுப்பினர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமி சுரங்க என்ற நபர், பாதாள உலகக் குழுத் தலைவரான உரு ஜுவா மற்றும் கோட்டா அசங்க குழுவைச் சேர்ந்த தனுஷ்க ஆரியவன்ச என்றழைக்கப்படும் ரங்கா ஆகியோரின் சகோதரரும் கூட என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் இதற்கு முன்னரும் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும், 2014ஆம் ஆண்டு வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உமாகலியா விளையாட்டரங்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மேடை மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்தில் சந்தேக நபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் ஹிம்புதான கொடெட வீதி மற்றும் கடுவெல மேல் பொமிரிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் முல்லேரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவின் பெண்களின் டிஜிற்றல் திறமைகள்; நியூயோர்க்கில் பிரமுகர்கள் கூட்டத்தில் ஆராய்வு



டிஜிற்றல் தொழில்நுட்பங்களுடன் சமூகங்களை மாற்றும் இந்தியாவில் பெண்கள் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) நோக்கி முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான வழிகளைக் காட்ட முடியும் என்று 77 ஆவது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை வாரத்தின் போது புகழ்பெற்ற பேச்சாளர்கள் எடுத்துரைத்தனர்.

வெள்ளியன்று 77ஆவது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை விவாதங்களை நிறைவு செய்யும் வகையில் இந்தியாவில் உள்ள ரிலையன்ஸ் அறக்கட்டளை, அவதானிகள் ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றால் உயர்மட்ட விவாதங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

நியூயோர்க்கில் நடந்த நிகழ்ச்சியில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உட்பட பல்வேறு தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி 'அபிலாகைளின் வெளியீடு, அணுகல் மற்றும் முகவர்: மகளிரின் வாழ்வைத் தொழில்நுட்பத்துடன் மாற்றுதல்' என்ற ரிலையன்ஸ் அறக்கட்டளை மற்றும் அவதானிகள் ஆராய்ச்சி அறக்கட்டளையின் வெளியீட்டு விடயத்தையும் உள்ளடக்கியது. அது, இந்தியாவின் தொலைதூர மூலைகளுக்கு உரிமைகள், நிதிச் சேவைகள்,உடல் நலத்துறை, சுகாதாரம் மற்றும் பலவற்றைக் கொண்டுவர டிஜிற்றல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் பெண்களின் உத்வேகமான கதைகளை விவரிக்கிறது.

இந்தியா விரைவில் ஜி 20 அமைப்பின் தலைமைப் பதவிக்கு வரவுள்ள சூழலில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர், வளரும் நாடுகளின் கவலைகளைக் கேட்க ஜி 20 மன்றம் ஒரு சிறந்த அமைப்பாகும் என்று 'ஜி 20 – பசுமை வளர்ச்சி மற்றும் அனைவருக்கும் மேம்பாடு உறுதி' என்ற நிகழ்ச்சியில் வலியுறுத்தினார்.

இந்தியா தனது தலைமைத்துவத்தின் போது பல நாடுகளை பங்கேற்க அழைத்துள்ளது. இதனால் உலகின் உண்மையான பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு அதிகமான குரல்கள் கிடைக்கின்றன. அவை அவர்களுக்குத் தகுதியான விழிப்புணர்வு அல்லது அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்ற கட்டாயமில்லை.

பன்முகத்தன்மையின் அவசியத்தையும் அதன் சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகளின் தொழில்நுட்ப தூதர் அமன்தீப் சிங் கில் ஒரு அறிக்கையில் நீங்கள் மக்களை, சரியான செயல்முறை மற்றும் தொழில்நுட்பத்தை ஒன்றிணைக்கும்போது, அற்புதம் எவ்வாறு நிகழ்கிறது என்பதைக் காண்பது உண்மையில் ஊக்கமளிக்கிறது. – என்றார்.

'பெண்கள் தொழில்நுட்பம் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள்' என்ற தலைப்பில் நடந்த விவாதத்தின் போது, இந்தியாவின் ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ரோம்பி ாாப், நீண்ட கால வளர்ச்சி மற்றும் குறுகிய கால நெருக்கடி பதில் இரண்டிலும் பெண்கள் முன்னணியில் இருக்கின்றனர் எனக் கூறினார்.

இந்தியாவில் அடுத்த நான்கு ஆண்டுகளில் ஒரு பில்லியன் (நூறு கோடி) ஸ்மார்ட்போன் பயனர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, கிராமப்புறங்களில் தேவை வியத்தகு அளவில் உயரும். தற்போது, இந்தியாவில் 54 சதவீத பெண்களிடம் மொபைல்போன் உள்ளது. இது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 45.9 சதவீதமாக இருந்தது. அதே நேரத்தில் வங்கிக் கணக்குகளை சுதந்திரமாக இயக்கும் பெண்களின் எண்ணிக்கை 53 சதவீதத்தில் இருந்து கிட்டத்தட்ட 80 சதவீதமாக அதிகரித்துள்ளது. 22.5 சதவீதத்திற்கும் அதிகமான இந்திய பெண்கள் நிதி பரிவர்த்தனைகளுக்கு மொபைல் போன்களைப் பயன்படுத்துகின்றனர்.

வளர்ச்சிக்கான ரிலையன்ஸின் அர்ப்பணிப்பு, 'எங்கள் கவனிப்பு' என்ற எங்கள் தத்துவத்தில் வேரூன்றியுள்ளது. இந்தியாவில் நிலையான வளர்ச்சி இலக்குககளை அடையப் பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் இருந்து பசுமை வளர்ச்சி மற்றும் அனைவருக்கும் சமமான மேம்பாடு வரை பல்வேறு துறைகளில் தளங்களை செயல்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்." – என ரிலையன்ஸ் அறக்கட்டளை தலைமை நிர்வாக அதிகாரி ஜகன்னாத குமார் தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடல்கள் கொரோனாத் தொற்றுப் பரவலின் போது சர்வதேச ஒத்துழைப்பிலிருந்து படிப்பினைகளை வழங்கின மற்றும் பாலின சமத்துவ மின்மையைச் சமாளிக்க அதிக குறுக்குவெட்டு அணுகுமுறைகளுக்கான அழைப்புகளுக்கும் வழிவகுத்தன். அதே நேரத்தில் முதலீட்டிற்கான பாதைகளை முன்னிலைப்படுத்தின – குறிப்பாகப் பெண்களுக்கான முன் முயற்சிகளில்.

ஜிம்பாப்வேயின் முதல் பெண்மணி ஆக்சிலியா மங்காக்வா, தனது வேலடிக்டரி உரையில், உண்மையான மாற்றம் என்பது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளிப்பதன் விளைவாக வரவேண்டும் என்று வலியுறுத்தினார்.

நியூசிலாந்தின் முன்னாள் பிரதமரும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் முன்னாள் நிர்வாகி ஹெலன் கிளார்க், மனித மேம்பாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொண்டு வெற்றி பெற்றதற்காக இந்தியாவைப் பாராட்டினார். பெண்களுக்கு இணைப்பதற்கான சமமான அணுகல் இருப்பதை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார். இதனால் அவர்கள் சுகாதாரத் தகவல்களைப் பெறுவதற்கு சமூகத்தில் முழுமையாக பங்கேற்க முடியும், கல்வி, அரசு சேவைகள், நிதிச் சேவைகள் மற்றும் பலவற்றிற்காக அதைப் பயன்படுத்த முடியும் என்றார் அவர்.

பிரிட்டனின் வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் அபிவிருத்திக்கான மாநில அமைச்சர் விக்கி ஃபோர்டு, வளர்ச்சி முயற்சிகள் காலநிலை மாற்றத்தை பார்வையில் வைத்திருக்க வேண்டும் என்றும் உலகெங்கிலும் உள்ள நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதுமையான நிதி வழிமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார். பெண்களுக்கு கல்வி கற்பது மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உலகப் பொருளாதார மன்றத்தின் தலைவர் போர்ஜ் பிரெண்டே, ஜி20 நிகழ்ச்சி நிரலில் தனியார் துறை ஒரு முக்கிய அங்கமாக இருக்க வேண்டும் என்றும், அதிக கவனம் தேவைப்படும் ஒரு பகுதியான காலநிலை மாற்றத் தழுவலுக்கு நிதியுதவி அளிக்க முடியும் என்றும் கூறினார். பசுமை மாற்றங்களை ஊக்குவிப்பதில் பல தரப்பு வளர்ச்சி வங்கிகளின் முக்கிய பங்கை அவர் சுட்டிக்காட்டினார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# இராணுவத் தளபாடக் கொள்முதலில் நாட்டின் நலன்தான் மிகவும் முக்கியம்

## வொஷிங்டனில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கம்



வொஷிங்டன,செப்.29

இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் 4 நாள் அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். வொஷிங்டனில் அமெரிக்க பாதுகாப்புத்துறை மந்திரி லொயிட் ஒஸ்டின் மற்றும் அந்நாட்டு வெளியுறவுத்துறை மந்திரி அண்டனி பிளிங்கன் ஆகியோரைத் தனித் தனியாக சந்தித்த அவர், இரு தரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார். இரு நாடுகள் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு, தகவல் பகிர்வு, தளவாட ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து இந்த ஆலோசனையின் போது விவாதிக்கப்பட்டது.

பின்னர் ஜெய்சங்கரும், அண்டனி பிளிங்கனும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது மத்திய மந்திரி ஜெய்சங்கர் கூறியதாவது:

உக்ரைனில் நடைபெறும் போருக்குப் பிறகு ரஷ்யாவிடம் இருந்து இராணுவத் தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை கொள்முதல் செய்வதில் இந்தியா எந்தச் சிக்கலையும் எதிர்கொண்டதாக நான் நினைக்கவில்லை.இராணுவ உபகரணங்கள் மற்றும் தளவாடங்களை நாங்கள் எங்கிருந்து பெறுகிறோம் என்பது ஒரு பிரச்சினை அல்ல. தற்போது போர் காரணமாக ஏற்பட்ட அரசியல் பதற்றத்தால் அது ஒரு பிரச்சினையாகி இருக்கிறது. தொழில்நுட்பத் தரம், திறன், குறிப்பிட்ட உபகரணங்கள் வழங்கப்படும் விதிமுறைகள் ஆகியவற்றை நாங்கள் பார்க்கிறோம. மேலும் எங்கள் தேசிய நலனுக்காக நாங்கள் நம்பும் ஒரு தேர்வை செய்கிறோம். கடந்த 15 ஆண்டுகளில், இந்தியா அமெரிக்காவிடமிருந்து நிறைய கொள்முதல் செய்துள்ளது.





பிரான்ஸிடம் இருந்து நாங்கள் ரஃபேல் விமானத்தை வாங்கினோம். இஸ்ரேலிடம் இருந்தும் வாங்கி உள்ளோம். எங்களைப் பொறுத்தவரை, போட்டி நிறைந்த சூழ்நிலையில் சிறந்த ஒப்பந்தத்தை எப்படி பெறுவது என்பதுதான் உண்மை. – இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அப்போது பேசிய பிளிங்கன், பருவநிலை மாற்றத் துறையில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றி வருகின்றன எனக் கூறினார்.

குவாட் மற்றும் ஜி20 அமைப்புகளில் இணைந்து பணியாற்றுவதன் மூலம் இரு நாடுகள் இடையேயான உறவுகள் உண்மையான முன்னேற்றத்தை அடைந்துள்ளன என்றம் அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து கனடாவுக்கான பிரதி உயர் ஸ்தானிகரிடம் எடுத்துரைப்பு!

## அருட்தந்தை சந்துரு பெர்னாண்டோ தெரிவிப்பு



இலங்கையில் தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடி தொடரும் பட்சத்தில் இலங்கையில் நடுத்தர வர்க்கம் காணாமல் போய்விடும் என ஜனனம் அறக்கட்டளை பணிப்பாளரும் சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவருமான வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ் சந்துரு பெர்னாண்டோ அடிகளார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தில் கனடாவுக்கான பிரதி உயர் ஸ்தானிகர் டேனியல் பூட்டை சந்தித்த போதே அருட்தந்தை இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கை மக்கள் தற்போது எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இந்த சந்திப்பின் போது கலந் துரையாடப்பட்டது.

இந்த நிலை தொடர்ந்தால் இலங்கையில் நடுத்தர வர்க்கம் என எதுவும் இருக்காது என்றும் மேல்தட்டு மற்றும் தாழ்நிலை வகுப்பினரே காணப்படுவர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக உலகில் சிறந்த தேயிலையை உற்பத்தி செய்யும் இலங்கையின் மலையகத்தில் உள்ள தோட்ட தொழிலாள வர்க்கத்தினருக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் என்பது சிம்மசொப்பனமாகி விட்டது என்றும் தெரிவித்துள்ளார். தற்போது பொருளாதார ரீதியில் பின் தங்கியுள்ள இலங்கையில் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளுக்கு நாளொன்றிற்கு மூவாயிரம் ரூபா தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்களின் தற்போதைய நிலைமையை அருட்தந்தை எடுத்துரைத்த போது அதனை புரிந்துகொண்ட கனடாவுக்கான பிரதி உயர் ஸ்தானிகர், கனடாவில் உள்ள அதிகாரிகளின் கவனத்திற்கு இதனைக் கொண்டு செல்வதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவுக்கு எதிரான விசாரணைகளைப் பொறுப்பேற்றது சி.சி.டி.!

## கொழும்பு பிரதான நீதிவானுக்கும் அறிவிப்பு

மேல் மாகாண வடக்கு திசைக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவுக்கு எதிராக, கொழும்பு நீதிவான் நீதிமன்றில் சி.ஐ.டியின் நிதி, வணிக குற்ற விசாரணை பிரிவு முன் வைத்த பீ அறிக்கை பொய்யான தகவல்களை அடிப்படையாக கொண்டது என கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்கவுக்கு அறிவித்துள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றின் கீழ் விசாரணையில் உள்ள சட்ட விரோத உண்டியல் முறைமை மூலமான வர்த்தகத்தை மையப்படுத்திய வழக்கொன்றில், போலி ஆவணங்களை சமர்ப்பித்து கைப்பற்றப்பட்ட 75 லட்சம் ரூபாவை சந்தேக நபர்களுக்கே திருப்பிக் கொடுக்க அழுத்தம் பிரயோகித்தார் என , முன்னாள் சி.ஐ.டி. பணிப்பாளரும் தற்போதைய மேல் மாகாண வடக்கு திசைக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபருமான ரொஹான் பிரேமரத்னவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் முன்னால் செயலரின் முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த சி.ஐ.டி.யின் நிதி, வணிக குற்ற விசாரணைப் பிரிவு, பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்ன தொடர்பில் அண்மையில் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தது.

அதன் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுக்க குறித்த விவகாரம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவிடம் கையளிக்குமாறும் சி.ஐ.டி. விசாரணையாளர்கள் கோரியிருந்த நிலையில், எதிர்வரும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி மன்றில் ஆஜராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே, இவ்வழக்கை மையப்படுத்தி, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் விஷேட அறிக்கை சமர்ப்பித்து கொழும்பு பிரதான நீதிவானுக்கு விளக்கமளித்தனர்.

இந்த விவகாரம் தொடர்பிலான விசாரணைகள் 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125 ஆவது அத்தியாத்தின் கீழ் பொலிஸ் மா அதிபரால் சி.சி.டி.யி டம் கையளிக்கப்பட்டுள்ளதாக இதன் போது சி.சி.டி. அதிகாரிகள் மன்றுக்கு அறிவித்தனர்.

ஏற்கனவே சி.ஐ.டியினர் சமர்ப்பித்த அறிக்கை பொய்யான தகவல்களுடன் கூடியது என இதன் போது மன்றுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், இதுவரையிலான விசாரணைகளில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்ன குற்றமிழைத்துள்ளார் எனத் தெரியவரவில்லை என கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் இந்திக தீபால் மன்றில் குறிப்பிட்டார்.

சி.சி.டி.யினர் சார்பில் அதன் பதில் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் நெவில் டி சில்வா, இலக்கம் 1 விசாரணை அறை பொறுப்பதிகாரி எஸ்.பி.டி.ஜே.ஏ. நிஷாந்த ஆகியோரும் ஆஜராகினர்.

இந் நிலையில் சி.சி.டியினர் முன் வைத்த கோரிக்கை பிரகாரம், கடந்த 5 ஆம் திகதி கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு விடுத்த அறிவித்தலையும் கொழும்பு பிரதான நீதிவான் நத்தன அமர்சிங்க ரத்துச் செய்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் வரை, அந்த வழக்கு விசாரணைகளை மூடி வைப்பதாக நீதிவான் அறிவித்தார்.

# இலங்கையில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ள இருவர் தமிழ்நாட்டில் கைது!

இலங்கையில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டு பிடியாணை பிறக்கப்பட்டிருந்த இருவர் தமிழ்நாட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி இலங்கையர்கள் குழுவொன்று சட்டவிரோதமான முறையில் பிரவேசித்துள்ளதாக இந்திய கடலோர பாதுகாப்புத் திணை க்களத்துக்குக் கிடைத்த தகவலின் பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவர்களில் இலங்கையில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இருவரும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

அவர்களில் ஒருவரான சந்திரகுமார் என்பவர் கிளிநொச்சி பிரதேசத்தில் மக்களைக் கொலை செய்தல், நகைக்கடைகளில் கொள்ளையடித்தல் உள்ளிட்ட பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றைய நபர் கிருபாகரன் எனவும், அவர் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் வசித்த நபரொருவரை கொலை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டவர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இவர்கள் இருவரும் ராமநாதபுரத்தில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் வசித்து வந்தனர் எனவும், தற்போது கைது செய்யப்பட்டு சென்னை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மக்கள் பட்டினியில் வாடும்போது கிறிஸ்மஸ்க்காக பெரும் பணத்தைச் செலவிட அரசு தயாராகின்றது!

## கர்தினால் குற்றச்சாட்டு

நாட்டின் தற்போதைய நிலை காரணமாக மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பதில் அமைச்சர்கள் உட்பட சுற்றுலாத் துறையைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்காகப் பெருமளவு பணத்தை செலவிடத் தயாராகின்றனர் என கர்தினால் மல்கம் ரஞ்சித் விசனம் வெளியிட்டுள்ளார்.

கிறிஸ்மஸ் வருகின்றது சுற்றுலாத் துறைக்கு பொறுப்பான அமைச்சர் உட்பட சுற்றுலாத் துறையின் முக்கிய அதிகாரிகள் கிறிஸ்மஸ் கொண்டாட் டங்களுக்காக கொழும்பை மின் விளக்குகளால் அலங்கரிக்க திட்டமிடுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் என்ன பயன் ஏற்படப்போகின்றது என கேள்வி எழுப்பியுள்ள கர்தினால், பொக்கட்கள் காலியாகவுள்ளன, இலங்கை உலகின் ஒவ்வொரு நாட்டிடமும் உதவி கேட்கும் நாடாக மாறியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.



மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணாமல் தலைவர்கள் சிறுபிள்ளை த்தனமாக நடந்துகொள்கின்றனர். ஒருவரையொருவர் குற்றம்சாட் டுகின்றனர். இதுதான் அவர்களின் பொறுப்புணர்வா? ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியில் சிக்குண்டுள்ளனர். போதிய அளவு உணவும் ஊட்டச்சத்தும் இல்லாததால் மாணவர்கள் பாடசாலைகளில் நோய்வாய் படுகின்றனர் எனத் தெரிவித்துள்ள கர்தினால், ஆனால் தலைவர்கள் மக்களின் துயரங்கள் நெருக்கடிகளை பார்க்காதவர்கள் போல நடந்துகொள்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

**நவராத்திரி சிறப்பம்சம்**

# அருளோடு பொருளை அளித்திடுவாய் அம்மா!



பாருலகில் வாழப் படைத்துவிட்டாய் தாயே
வாழ்வு வளமாகத் தனம்வேண்டுந் தாயே
தினம் போற்றுமெம்மை திகப்படையா வண்ணம்
அனுதினமும் எமக்கு அருள்புரிவாய் தாயே

பொருளில்லா உலகில் பொழுது விடியாதே
பொருளின்றி எதுவும் எமையணுக மாட்டா
அருளோடும் பொருளும் உன்னிடத்தே உண்டு
அருளோடு பொருளை அளித்திடுவாய் அம்மா

நோயின்றி வாழ நூல்கள்பல கற்க
வாய்மையுட னிருக்க வறுமையது போக

ஆதார மனைத்தும் உன்கருணை அம்மா
அருள்சுரந்து எம்மை அரவணைப்பாய் அம்மா

தானதர்மம் செய்ய பெருமாசை தாயே
தனமட்டும் எமக்குத் தங்குதில்லை தாயே
ஆனமட்டும் நாமும் உழைக்கின்றோம் அம்மா
ஆனாலும் தனமோ அணுகவில்லை அம்மா

நீமனது வைத்தால் நிறைந்துவிடும் அம்மா
நினைப் பெல்லாம் நீயாயிருக்கிறாய் அம்மா
வாழ்நாளில் நாமும் வறுமையின்றி வாழ
வரமருள்வாய் இலக்குமித் தாயேநீ எமக்கு

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**



# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## மதியுரைஞரின் இணக்கமும் சுயநிர்ணய உரிமையும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 135**

நோர்வே ஊடான மூன்றாம் கட்ட சமாதான பேச்சுவார்த்தைகளில் சமஷ்டி அமைப்பிலான தீர்வை நோக்கிப் போகலாம் என்ற இணக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த முடிவுக்கு வந்து அதற்கான இறுதி இணக்கம் விடுதலைப் புலிகள் தரப்பில் தேவையானபோது, வன்னியில் நள்ளிரவு கடந்த நேரம் பிரபாகரனை நித்திரையில் இருந்து எழுப்பி, அந்த இணக்கத்தின் பின்னணிகள் பற்றி விளக்கம் தந்து, ஒப்புதல் பெற முடியும் என்று மதியுரைஞர் பாலசிங்கம் நினைக்கவில்லை. அவர் பேச்சுவார்த்தைகளில் தம்முடன் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்ட மூத்த தளபதிகள் கருணா, தமிழ்ச்செல்வனை புலிகள் சார்பில் இணக்கத்தை தெரிவிக்குமாறு கேட்டார். அவர்கள் மதியுரைஞரின் பேச்சுக்குத் தலைவர் மதிப்பு கொடுப்பார் என்பதால் அவரையே அந்த இறுதி இணக்கத்தைத் தெரிவிக்குமாறு கேட்டு, இக்கட்டில் இருந்துதம்மைவிடுவித்துக்கொண்டனர்.

சமஷ்டி அமைப்பில் தீர்வு நோக்கிப் போக இணக்கம் என்பதை இரவில் நோர்வேயிலிருந்து சூடான 'எக்ஸ்குளூசிவ்' செய்தியாக உதயனின் விசேட பிரதிநிதி அனுப்ப, அந்தச்செய்தி யாழ்ப்பாணத்தில் அதிகாலை வெளிவந்த உதயன் பத்திரிகையில் பிரசுரமானது. அதனைப் பார்த்தே அடுத்த நாள் காலை பிரபாகரன் விடயத்தைத் தெரிந்து கொண்டார். மதியுரைஞர் அப்படி இணங்கியமை அவருக்கும் பிரபாகரனுக்கும் இடையே ஒரு பனித்திரையை உருவாக்கிற்று. விடுதலைப் புலிகளோடு புத்திஜீவிகளாய் இணைந்து இருந்தவர்கள், இந்த இணக்கங்கள் ஏற்பட்டமையால் தமிழரின் சுயநிர்ணய உரிமைக்குப் பங்கம் விளைவிக்கப்பட்டுள்ளது என அபிப்பிராயங்கள் தெரிவிக்க, பிரபாகரனுக்கு அழுத்தங்கள் அதிகரித்தன. இதனையொட்டி மதியுரைஞர் தாங்கள் தங்களது உள்ளக சுயநிர்ணைய உரிமையில் ஒரு சமஷ்டித் தீர்வை 'ஆராயலாம்' என இணக்கம் தெரிவித்தோமே ஒழிய, அது எவ்வித்திலும் வெளிப்புற சுயநிர்ணய உரிமையைப் பாதிக்கவில்லை என விளக்கங்கள் தந்துகொண்டு இருந்தார்.

சுயநிர்ணய உரிமை என்பது சர்வதேச உரிமைகளில் கடல் மண்ணளவு. அதில் அது எவ்வளவு, எவ்விதத்தில் தமிழ் மக்களுக்கு அது பொருந்தும், தீர்வு தரும் என்பது கைமண் அளவிலேயே எங்கள் தரப்புகளால் அரசியலுக்காகப் பேசப்பட்டுள்ளது. அந்த சர்வதேச மனித உரிமை ஒரு குழுமமாக தமிழ் மக்களுக்கு உண்டு என்பதை உறுதியாக பதிந்து விட்டு, அவற்றின் விரிவுக்கு இங்கு நாம் போகவில்லை.

இந்த சுயநிர்ணய உரிமைகளை எப்படி, எவ்விதத்தில் நிறுவிக்கொள்ள போகிறோம் என்பதில்தான் தமிழ் மக்களின் சாணக்கியம், சாமர்த்தியம் சர்வதேசத்தின் அன்றில் அயல் நாடுகளுடனான உறவுகள், ஈடுபாடுகள் என்பவை தங்கி உள்ளன.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளின் தொடக்கத்தின் அங்கமாகவோ அன்றில் பிராந்திய அதிகார அடிப்படையிலோ இந்தியா ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, பிரபாகரனுக்கு தான் இடைக்கால நிர்வாக அலகை இணைந்த மாகாண சபைகள் உருவாக்கப்படும் வரை ஏற்படுத்தி, அதில் விடுதலைப் புலிகளுக்கு பெரும்பான்மை தரலாம் என ராஜீவ் காந்தி உறுதியளித்து, ஒரு லட்சத்துக்கும் மேலான படை அணிகளையும் தமிழ் பகுதிகளுக்கு அனுப்பி, சிங்கள இராணுவத்தையும் முகாம்களுக்குள் முடக்கி வைத்தார். இவை ஓரடி, இரண்டடி எடுத்து வைக்கும் முன்னரே ஏகோபித்ததலைமைப்பதவிஅங்கலாய்ப்புகள் முன்னெழுந்து, இந்தியப் படைகளுடன் முரண்பாடுகள் வெடித்து, இவை உதறி எறியப்பட்டன.

பிரேமதாஸாவுடன் இணக்கங்கள் பேசி, இந்தியப் படைகளைத் திருப்பி அனுப்பி, அதில் வெற்றிக் களிப்புக் கொண்டு, தொடர்ந்து நடந்த போரினால் சந்திரிகாவின் தீர்வுகளையும் நாடாது, நோர்வே ஊடாக சர்வதேச அனுசரணையில் பேச்சுவார்த்தைகள் ஏற்படுத்திய போது, சுனாமி தாக்கி தமிழர் பிரதேசங்கள் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியதும் மக்களின்வாழ்வாதாரங்கள், அவர்களின் புனர்வாழ்வுகள், அதன் நிர்மாணங்கள், பெரும் சுமையாக விடுதலைப் புலிகளின் தோள்களில் விழுந்தன.

அத்துடன் ஸ்ரீலங்கா இராணுவமும் போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டு இருந்தாலும் சிங்கள பேராண்மையின் முன்னெடுப்பை கைவிடத் தயாராகவிருக்கவில்லை. தாங்கள் கைப்பற்றி இருந்த தமிழர் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி, அங்கு பாதிக்கப்பட்ட மக்கள் மீள்குடியமர்வு செய்யக் கூடாது என்ற இராணுவ உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.



சுனாமியின் பாதிப்பால் நாடு முழுவதும் அதல பாதாளத்தில் இன்றைய வங்குரோத்து நிலை போல் விழுந்து கிடந்தது.

அதற்கு முன்னரே யுத்தத்தினால் நிலைமை மோசமடைந்திருந்தது. அப்பொழுது பிரதமராக இருந்த ரணிலும் சர்வதேச நாடுகளிடம் ஸ்ரீலங்காவை மீட்டெடுக்க இன்று போல் நிதி உதவி கோரினார். சர்வதேச நாடுகளும், அரசு சார் பற்றநிறுவனங்களும்நாட்டைமீட்டெடுக்க நிதி உதவிகள் தர முன்வந்தன.

அந்த நிலைகளில் பேச்சு வார்த்தைகளின் நாலாவது கட்டம் தாய்லாந்தில் நடந்த போது, விடுதலைப் புலிகளின் தளபதி தமிழ்ச்செல்வன் பேச்சு வார்த்தைகளின் இடையில் நிறுவப்பட்ட உடனடி புனர்வாழ்வும் மனிதாபிமான தேவைகளுக்கான குழுவின் (committee on immediate rehabilitation and humanitarian needs SIRHN) அறிக்கையை சமர்ப்பித்து, இவை நடைமுறைப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுவது சமாதான பேச்சு வார்த்தைகளில்மக்களுக்குநம்பிக்கையீனங்களை ஏற்படுத்துவதாக தெரிவித்து, தொடர்ந்த அழுத்தங்களினால், அரசாங்கம் உடனடி புனர்வாழ்வு, மனிதாபிமானதேவைகளுக்கான குழுவை பலப்படுத்துவதாகவும், அப்படியான பணிகளை மேற்கொண்டு வரும் அரச நிறுவனங்கள் இந்த அமைப்போடு ஒருங்கிணைக்கப்படும் எனவும், வடக்குக் கிழக்கின் புனர்நிர்மாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் உலக வங்கியின் மேற்பார்வையில் செலவழிக்கப்படும் எனவும் ஒத்துக் கொள்ளப்பட்டது.

ஆயினும் புனர்வாழ்வு ஸ்ரீலங்காவின் இராணுவத்தால் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற ரீதியில் தடுக்கப்பட்டன. இராணுவம் மக்களிடையே இருந்து விலகி, முகாம்களுக்குள் இருக்கும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு மாறாக, அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் உயர்வலயங்களாக இடங்களை விஸ்தரிப்புச் செய்தனர். இதற்கு எதிராக எவ்வளவு வாதங்கள் வைத்தும் இராணுவம் திடமாக இருந்ததால், விடுதலைப் புலிகள் படைகள் மற்ற பகுதிகளில் இருந்து விலகுதல் பற்றிய குழுவில் பங்குபற்றுவதில்லை என அறிவிக்க, அது பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டையானது.



இந்தியப் படைகள் இங்கு இறங்கிய போது உடனடியாக தமிழ்ப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவம் முற்றாக முகாம்களில் முடங்கியதும், திருகோணமலையில் நடந்த சம்பவங்களால் கொதித்தெழுந்து வெளியேறும் என்றாலும், இந்தியாவின் அழுத்தங்களினால் அது அமுக்க பட்ட முறையும், உள்ளக சுயநிர்ணய இணக்க பேச்சு வார்த்தைகளில் ஸ்ரீலங்கா தரப்பும் அதன் இராணுவமும் தங்களது உரிமைகளை நிலை நாட்டிய முறைகளும், விடுதலைப் புலிகளால் கூட உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு, 5ஆம் கட்டப் பேச்சு வார்த்தைகளுக்கு ஜேர்மனியின் பேர்ளினுக்கு வந்த போது, இவை எவ்வளவு சிதம்பர சக்கரங்களாக மாறுகின்றன என்பதைப் புலிகள் உணர்ந்தார்கள்.

(வளரும்...)

## திலீபன் நினைவேந்தலை .........

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

2015ஆம் ஆண்டு எங்களை மஹிந்தவால் உருவாக்கப்பட்டவர்கள் என்கிறார்கள். அப்படியாயின் ஏன் 2017ஆம் ஆண்டு எங்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அழைத்துக் கதைக்க வேண்டும் ?

அதேவேளை, 2017ஆம் ஆண்டு முதல் முதல் மறவன்புலவு பிரபாகரன் தூக்குக் காவடி எடுத்தார். அப்போது எங்களுடன் நின்றவர்கள்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்.

நாங்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்ணியினரும் இணைந்து 2017ஆம் ஆண்டு நினைவேந்தலை நடத்தினோம் என மறுநாள் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

அடுத்து 2018ஆம் ஆண்டு யாழ். மாநகர சபை மேயராக ஆர்னோல்ட் இருந்தபோது மாநகர சபை ஆளுகைக்குள்தான் நினைவிடம் உள்ளது. அதனால் தாம்தான் செய்வோம் எனக் கூறியமையால் சர்ச்சைகள் ஏற்பட்டன. ஆனாலும், அவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட அந்த நிகழ்விலும் நாங்கள் பங்குபற்றினோம்.

போர் முடிவடைந்த பின்னர் 2016ஆம் ஆண்டு முதலாவதாக நாங்கள் தனியே நினைவேந்தல் செய்கின்றோம். அடுத்த ஆண்டு 2017 நாங்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் இணைந்து இரண்டாவது நினைவேந்தலைச் செய்கின்றோம். 2018ஆம் ஆண்டு யாழ். மாநகர சபை செய்தது. அடுத்த இரண்டு வருடங்கள் நீதிமன்றத் தடை உத்தரவு. இப்படி இருக்கையில் எப்படி 6 வருடங்கள் எனச் சொல்கின்றார்கள் ?

இவர்கள் தென்னிலங்கையில் உள்ள தமது சொத்துக்களைப் பாதுகாக்க யாழ்ப்பாணத்தில் மக்களை ஏமாற்றி அரசியல் செய்கின்றார்கள். அவர்களின் சொத்துக்களைப் பாதுகாக்க நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வேண்டும். அதற்குப் போராளிகளின் தியாகங்கள் தேவை.

தலைவரின் சொல்லுக்குச் செயல் வடிவம் கொடுத்தவர்கள் போராளிகள், மாவீரர்கள். ஆகவே, போராளிகளையே, மாவீரர்களையோ கொச்சைப்படுத்தத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு அதிகாரம் இல்லை.

நாங்கள் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் சிலைக்கு மாலை போட வரவில்லை. எங்கள் மக்களுக்காகத் தன்னுயிரை நீத்த தியாக தீபத்துக்கு அஞ்சலி செலுத்தவே வருகின்றோம். அவர்கள் விரும்பினால், ஜீ.ஜீயின் உருவப் படத்தைப் பொத்துவில் இருந்து யாழ்ப்பாணம் வரை ஊர்வலமாகக் கொண்டு வரட்டும். அப்போது தெரியும் மக்கள் அவர்களுக்குத் தரும் வரவேற்பு.

நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவையோ, கோட்டாபய ராஜபக்ஷவையோ இரகசியமாகச் சந்திக்கவில்லை. ஜனாதிபதி தேர்தல் காலத்தில் எங்களைச் சந்திக்க வரச் சொல்லி அழைப்பு விடுக்கப்பட்டது. நாங்கள் போனோம். அது ஊடகங்களுக்கும் தெரியும். பொய் சொல்லி ஒளித்துப் போகவில்லை.

சந்திப்பின் போது தேர்தலில் தமக்கு ஆதரவு தருமாறு ராஜபக்ஷக்கள் கோரினார்கள். நாங்கள் போராளிகள் விடயங்கள் உட்பட சில பிரச்சினைகளைச் சொன்னபோது அவர்கள் அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

அதனால் நாம் சஜித்துக்கு ஆதரவு வழங்க முடிவெடுத்து யாழ். ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பு நடத்தி அதனைப் பகிரங்கமாகத் தெரிவித்தோம்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் 'வட்ஸ் அப்' குழுவில் வந்தது என்று ஒலிப் பதிவில் ஒரு சிறுதுண்டைக் காட்டித் திரிகின்றார்கள். அப்படி ஜனநாயகப் போராளிகளுக்கென எந்தவொரு 'வட்ஸ் அப்' குழுவும் இல்லை - என்றார்.

## தேசிய பேரவையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, உத்தர லங்கா சபாகய (விமல் கூட்டணி), டலஸ் அணி என்பனவே தமது தரப்பில் எந்தவொரு உறுப்பினரும் தேசிய பேரவையில் இடம்பெறமாட்டார்கள் என்று அறிவித்துள்ளன.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர், எதிரணி பிரதம கொறடா ஆகியோர் தேசிய பேரவையில் பதவி நிலை உறுப்பினர்களாவர். எனினும், இன்றைய கூட்டத்தில் பங்கேற்கபோவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிவித்துள்ளார். இதே நிலைப்பாட்டில்தான் எதிரணி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியல்லவும் உள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத்தில் கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப் பதவி எதிரணிக்கு வழங்கப்படாவிட்டால், தேசிய பேரவையை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிக்கும் எனவும் இடித்துரைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி வைத்துள்ள மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோரின் பெயர்களும் தேசிய பேரவைக்குப் பெயரிடப்பட்டுள்ளது. எனினும், அவர்கள் நாளைய கூட்டத்தில் பங்கேற்பது குறித்து உறுதியான தகவல் இன்னும் வெளியாகவில்லை.

விமல் வீரவன்ச தலைமயிலான உத்தர லங்கா சபாகயவில் அங்கம் வகிக்கும் வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, அத்துரலிய ரத்தன தேரர் , திஸ்ஸ விதாரண ஆகியோரின் பெயர்களும், தேசிய பேரவைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேசிய பேரவைக்கான உறுப்பினர்கள் கடந்த 23ஆம் திகதி சபாநாயகரால் பெயரிடப்பட்டனர்.

தேசிய பேரவையில் இடம்பெறுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ள நிலையில், தமது அனுமதியின்றியே பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரணிகளின் பங்களிப்பு இன்றி நடைபெறும் தேசிய பேரவைக் கூட்டமானது மணமகன் இல்லாத திருமணம் போலவே அமையும் என்று எதிரணிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## கிழக்கில் மக்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை தம்புள்ளை, மாத்தளையில் நடந்தது!

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெ ழுத்து திரட்டும் நடவடிக்கை செவ்வாய்க்கிழமையும் முன்னெடுக் கப்பட்டிருந்தது.

இதற்கமைய இந்த நடவடிக்கை தம்புள்ளை, மாத்தளையில் மக்களின் பேராதரவுடன் முன்னெ டுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரா.சாணக்கியன், அரசி யல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றி ருந்தனர்.

பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுச் கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன் துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது என்பதும் குறிப் பிடத்தக்கது.







# முல்லை குறுந்தூர்மலையில் சிங்களவர்களை குடியேற்றப் போவதில்லை என்கின்றார் விதுர!

முல்லைத்தீவு குறுந்தூர்மலையில் இடம்பெறும் தொடர்ச்சியான நிகழ்வுகள் தவறான புரிதலால் இடம்பெற்றன என நம்புவதாக புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித் துள்ளார்.

தொல்பொருள் பிரதேசத்துக்குச் சொந்தமான காணிகளே தொல்பொருள் பிரதேசமாக பெயரி டப்படுமே தவிர அங்கு சிங்கள குடியேற்றம் நடைபெறாது என்றும் விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்படும் தொன்மை பொருள்களைப் பாதுகாக்கும் நடவடிக்கை எதிர் காலத்திலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்ப டும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள் ளார்.



விகாரைகள் தேவாலயங்கள் சட்டம் தற்போது வரையறுக்கப்பட்டு வருவதாகவும் அது தொடர்பாக மகாநாயக்க தேரர்களுடன் கலந்து ரையாடிய பின்னர் நாடாளுமன்றில் சமர்ப்பிக் கப்படும் என்றும் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# இக்கட்டான நிலையில் நாம் இலங்கைக்கு உதவினோம்!

## ஐ.நாவில் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டு

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண் டிருக்கும் நாடுகளின் கடன் நிலைமை மேலும் அதிகரிப்பது கவலைக்குரிய விடயம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தியாவால் இந்த ஆண்டு 300 கோடியே 80 லட்சம் டொலர் இலங்கைக்கு உதவி வழங்கப்பட்டதாகவும் இந்திய வெளி விவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்தங் களின்போதும் இந்திய அயல் நாடுகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டதாகக் குறிப் பிட்டுள்ளார்.



இதேவேளை பயங்கரவாதம், தொற்றுநோய் போன்ற உலகளாவிய பிரச்சினைகளை எதிர் கொள்ள, ஒன்றிணைவு, கூட்டு ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியம் என்பன அவசியம் என்றும் ஜெய்சங்கர் அழைப்பு விடுத்துள்ளார்.

# 2024 ஆம் ஆண்டு வரை ரணில் நீடிக்க ஐக்கிய மக்கள் சக்தி அனுமதிக்காது!

## மரிக்கார் எம்.பி. திட்டவட்டம்

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை 2024 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருக்க ஐக்கிய மக்கள் சக்தி அனுமதிக்காது எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பி னர் எஸ்.எம்.மரிக்கார், பட்டினிக்கு தீர்வு காணத் தவறினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை அவர் எங்கிருந்தாலும் சுற்றி வளைக்க நேரிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக் குத் தெரிவித்துள்ள அவர் –

தாங்கள் இன்னும் சில நாள்கள் மட்டுமே காத்திருப்போம் என்றும் அவர் வசிக்கும் பகு தியை சுற்றி வளைப்போம் என்றும் அவரை நகர அனுமதிக்காமல் ஓர் இடத்தில் அடைத்து வைப்போம் என்றும் குறிப்பட்டுள்ளார்.



குடிமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக் குத் தீர்வு காண ஜனாதிபதிக்கு போதிய கால அவகாசம் வழங்கியுள்ளதாகவும் தங்களின் பொறுமை மலிந்து வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தீ விபத்தால் இடம்பெயர்ந்தவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப்படுமாம்!

## கொழும்பு மாவட்ட செயலர் அறிவிப்பு

கொழும்பு 15 முகத்துவாரம், கஜீமா தோட்டத்தில் பரவிய தீ விபத்தினால் இடம்பெயர்ந்துள்ள 300 பேருக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படும் என கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் இந்த தீ விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாநகர தீயணைப்பு திணைக்களம் மற்றும் கடற்படை யின் 10 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடு படுத் தப்பட்டன எனத் தீயணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த தீ விபத்தால், உயிர்ச் சேதமோ காயமோ எவருக்கும் ஏற் படவில்லை என்பதுடன் சுமார் 300 பேர் அளவில் இடம் பெயர்ந்துள் ளனர்.

இடம்பெயர்ந்தவர்கள் களனி நதீ விகாரை மற்றும் முவதொர உயன அடுக்குமாடி குடியிருப்பு சனசமூக மண்டபத்தில் தற்காலிக தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.



தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படாத நிலையில் கிராண்ட்பாஸ் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்து வருகின் றனர்.

இந்தநிலையில் இந்த மக்க ளுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீடமைப்புத் தொகுதிகளில் இருந்து வீடுகளை வழங்குவதற்கான முன்மொழிவு நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாணிக்கக்கல் அகழ்வு நால்வர் விளக்கமறியலில்!

ஹோர்டன் சமவெளி வனப்பகுதி யில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்த குற்றச்சாட் டில் ஹோர்டன் சமவெளி வன ஜீவராசி கள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட பிரதேசசபை உறுப்பினர் உள்ளிட்ட நால்வரை எதிர் வரும் மாதம் 6 ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு நுவரெ லியா மாவட்ட நீதிவான் நீதிமன் றத்தின் நீதிவான் உத்தரவிட்டுள் ளார்.

ஹோர்டன் சமவெளி தேசிய வனப் பூங்காவின் எல்லைப் பகுதியில் உள்ள கிரிகல்பொத்த கீழ்பிரிவின் வனப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக் கக்கல் அகழ்வு முன்னெடுக்கப்படுவ தாகக் கிடைத்த தகவலுக்கமைய மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போதே, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

நோர்வூட் பிரதேசசபையின் உறுப் பினர் உள்ளிட்ட நால்வரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த நான்கு சந் தேகநபர்களை கைதுசெய்யும் போது, ஏனைய மூவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும், அவர்களை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட் டுள்ளனர் எனவும் ஹோர்டன் சம வெளி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, மாணிக்கக்கல் அகழ் விற்குப் பயன்படுத்தப்பட்ட உபகர ணங்களையும் கைப்பற்றி நுவரெ லியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத் தில் ஒப்படைத்துள்ளதாகவும் அதிகாரி கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து சேதம் விளைவித்த மூன்றுபேர் கைது!

கொழும்பு, செப். 29

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி, கொழும்பு – கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து, உடை மைகளுக்கு சேதம் விளைவித்தார் கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கொழும்பு – மத்திய பிரிவு குற்ற விசாரணைப் பிரிவினால் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

சந்தேகநபர்கள், அங்குனு கொல பெலஸ்ஸ பகுதியைச் சேரந்த 22, 44 மற்றும் 50 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2022இல் வெளியிடப்பெற்றது.